In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No.11/2021 | Prosecution witness P.W.6 |
| Name: Boopathy | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 28.08.2023

**(Accused is present.)**

முதல் விசாரணை :-

நான் தற்போது முத்துலாபுரத்தில் வசிக்கிறேன். அசா2 என் கணவர். அசா1 என் கொழுந்தன் மனைவி. அசா3 என் கொழுந்தன். நான் கூலி வேலை பார்த்து வருகிறேன். எதிரி சங்கிலி எங்கள் ஊரைச் சேர்ந்தவன். 17.05.2020 ம் தேதி பகல் 2.45 மணிக்கு நாங்கள் வேலை முடித்துவிட்டு வந்துகொண்டிருந்தோம். அப்போது சங்கிலி வீட்டு முன்பாக விஜயலட்சுமி, தமிழரசி, கிருஷ்ணமூர்த்தி, அழகர்சாமி, அலெக்ஸ், வினோத் ஆகியோர்கள் இருந்தார்கள். ஒருவருக்கொருவர் சத்தம்போட்டுக்கொண்டிருந்தார்கள். சங்கிலி வீட்டிற்குள் சென்று கத்தியை எடுத்துவந்து கிருஷ்ணமூர்த்தியின் இடதுபக்க மார்பில் 2 குத்தி குத்தினான். என் கொழுந்தன் சுருண்டு விழுந்து விட்டார். பின்னர் வினோத் மற்றும் அலெக்ஸ் ஆகியோர்கள் கிருஷ்ணமூர்த்தியை வத்தலக்குண்டு அரசு மருத்துவமனைக்கு பைக்கில் கொண்டு சென்றார்கள். அங்கு மருத்துவர் பார்த்துவிட்டு கிருஷ்ணமூர்த்தி இறந்துவிட்டதாக சொன்னார். நாங்கள் மருத்துவமனைக்கு சென்று அங்கே இருந்தோம். மறுநாள் போலீசார் என்னை விசாரணை செய்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :- இல்லை

A MUTHUSARATHA

Digitally signed by A MUTHUSARATHA
Date: 2023.08.28 17:55:14 +0530

Principal District Judge,
Dindigul.